# வளங்களையும், உற்பத்திகளையும் பங்கீடு செயதல்

e-thaksalawa.moe.gov.lk



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

## தேர்ச்சி மட்டம்



வளங்களையும், உற்பத்திகளையும் பங்கீடு செய்வது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் முறையை விளக்குவர்.

## தெரிவுப் பிரச்சனை காரணமாக எல்லா பொருளாதார சமூகங்களும் எதிர்நோக்க வேண்டிய பொதுவான அடிப்படைப் பிரச்சனைகள்

- எதை உற்பத்தி செய்தல் ? எந்தளவு உற்பத்தி செய்தல் ?
- யாருக்காக உற்பத்தி செய்தல் ?
- எவ்வாறு உற்பத்தி செய்தல் ?



## எதை, எந்தளவு உற்பத்தி செய்தல் ?

- வளங்களின் அருமை மாற்றுப் பயன்பாடு என்பவற்றின் காரணமாக எந்தவொரு சமூகமும் இப் பிரச்சனைக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது அதாவது வளங்களை எவ்வகையான உற்பத்திக்கு ,எந்தளவு உற்பத்தி ஒதுக்கீடு செய்தல் என்பது பற்றிய பிரச்சனையாகும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திரு. E.பிரபாகரன் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி , இளவாலை)

கணினி வடிவமைப்பு :- திரு க.வினுஜன், ஆசிரியர் - த.தொ.தொ, (யா/வட்டு இந்துக்கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தேர்ச்சி மட்டம் - 1.5

## எவ்வாறு உற்பத்தி செய்தல் ?

- உற்பத்தியின் பொருட்டு எவ்வகையான தொழிநுட்பத்தை பயன்படுத்துதல் என்பது பற்றிய பிரச்சனையாகும் அதாவது உற்பத்தியின் போதனா காரணி இணைப்பு பற்றிய பிரச்சனையாகும்.
- இந்த தொழிநுட்பத் தெரிவு பிரச்சனை என்பது மூலதனச் செறிவாகவோ , ஊழிய செறிவானதாகவோ, நடுத்தரமானதாகவோ இருக்கும்.
- குறித்த உற்பத்தி முயற்சி ஒன்றில் பயன்படுத்தும் வளங்களில் ஊழியம் சார்பு முக்கியத்துவம் வாய்ந்தது எனின் ஊழியச் செறிவு எனப்படும். மாறாக மூலதனம் சார்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பின் மூலதனச் செறிவு எனப்படும் .

## யாருக்காக உற்பத்தி செய்தல் ?

- சமூகத்தின் மொத்த உற்பத்தி யாருக்கிடையில் பங்கீடு செய்யப்பட வேண்டும் என்பதாகும் .அதாவது அருமையான வழங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் யாரால் நுகரப்படுகின்றது என்பதாகும். இந் நுகர்வின் அளவானது காரணி வருமான அளவினால் தீர்மானிக்கப் படுகின்றது. காரணி வருமானங்களை அதிகமாக உழைக்கும் உரிமையாளர்கள் அதிகளவு உற்பத்திகளை நுகரும் வாய்ப்புக்களை பெறுவர். எனவே பங்கீடு காரணி வருமான பங்கீட்டுடன் தொடர்புபட்டது.

தொகுப்பு :- திரு. E.பிரபாகரன் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி , இளவாலை)

கணினி வடிவமைப்பு :- திரு க.வினுஜன், ஆசிரியர் - த.தொ.தொ, (யா/வட்டு இந்துக்கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk